# கூட்டுறவுச் சங்கங்களுக்கான நான்காம் நிலைத் தேர்தல்

## ஆகஸ்ட் 12ல் வேட்பு மனுத் தாக்கல்

## ஆகஸ்ட் 17ல் வாக்குப்பதிவு

## மாநிலத் தேர்தல் ஆணையர் அறிவிப்பு

தமிழகத்தில் கூட்டுறவுச் சங்கங்களுக்கான நான்காம் நிலைத் தேர்தலுக்கான வேட்பு மனுத்தாக்கல் ஆகஸ்ட்-12அன்று நடைபெறும் என்றும் வாக்குப்பதிவு ஆகஸ்ட்-17ஆம் தேதியன்று நடைபெறும் என்றும் கூட்டுறவுச் சங்கங்களுக்கான மாநிலத் தேர்தல் ஆணையர் திரு.ம.ரா. மோகன், இ.ஆ.ப., (ஓய்வு) தெரிவித்துள்ளார். இது சம்பந்தமாக அவர் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு வருமாறு:-

### நான்காம் நிலைத் தேர்தல்

தமிழகத்தில் முதல் நிலையில் 22,212 கூட்டுறவுச் சங்கங்களுக்கு நான்கு கட்டங்களாக தேர்தல் நடைபெற்றது. இரண்டாம் நிலையில் 191 சங்கங்களுக்கும், மூன்றாம் நிலையில் 82 சங்கங்களுக்கும் தேர்தல் நடைபெற்று முடிவடைந்துள்ளது. மூன்றாம் நிலையில் தேர்தல் நடைபெற்ற சங்கங்களில் தலைவர் / துணைத்தலைவர் தேர்தலும் முடிவுற்று தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்கள் / துணைத்தலைவர்கள் 17.7.2013அன்று பதவி ஏற்க உள்ளனர். இதனைத் தொடர்ந்து நான்காம் நிலையில் 58 கூட்டுறவுச் சங்கங்களுக்கு தேர்தல் நடைபெறவுள்ளது.

### தேர்தல் நடைபெறவுள்ள சங்கங்கள்

நான்காம் நிலையில் கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளரின்கட்டுப்பாட்டில் உள்ள தமிழ்நாடு மாநில தலைமை கூட்டுறவு வங்கி, தமிழ்நாடு நுகர்வோர் கூட்டுறவு இணையம், மாவட்ட கூட்டுறவு ஒன்றியங்கள், கூட்டுறவு அச்சகங்கள் என மொத்தம் 57 கூட்டுறவு சங்கங்களுக்கும் தொழில் ஆணையர் மற்றும் தொழில் வணிகத்துறை ஆணையரின் கீழ் உள்ள தமிழ்நாடு தொழிற் கூட்டுறவு வங்கிக்கும் தேர்தல் நடைபெறவுள்ளது. நான்காம் நிலையில் மொத்தம் 58 சங்கங்களில் தேர்தல் நடைபெறவுள்ளது.

## தேர்தல் திட்டம்

மேற்குறிப்பிட்ட 58 கூட்டுறவுச் சங்கங்களுக்கான வாக்காளர் பட்டியல் 31.7.2013 அன்று வெளியிடப்படுகிறது. இந்த வாக்காளர் பட்டியலுக்கான மறுப்பு ஏதும் இருப்பின் அதனை 2.8.2013–க்குள் தெரிவிக்கலாம். இறுதி வாக்காளர் பட்டியல் 5.8.2013அன்று வெளியிடப்படும்.

## வேட்பு மனு தாக்கல்

வேட்பு மனுத்தாக்கல் 12.8.2013 அன்று காலை 10 மணி முதல் மாலை 4.00 மணி வரை நடைபெறும். அன்றே வேட்பு மனுக்கள் பரிசீலனை செய்யப்பட்டு அன்று மாலை 6.00 மணிக்கு தகுதியான வேட்பாளர் பட்டியல் வெளியிடப்படும். வேட்பு மனுவை திரும்பப் பெற விரும்புவோர் மறு நாள் 13.8.2013அன்று காலை 10.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை திரும்ப பெற்றுக் கொள்ளலாம். அன்று மாலை 5.00 மணிக்கு போட்டியிடும் வேட்பாளர்களின் இறுதிப்பட்டியல் வெளியிடப்படும்.

## வாக்குப்பதிவும், வாக்கு எண்ணிக்கையும்

போட்டியுள்ள கூட்டுறவுச் சங்கங்களில் 17.8.2013 அன்று காலை 8.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை வாக்குப்பதிவு நடைபெறும். 19.8.2013 அன்று காலை 10.00 மணிக்கு வாக்குகள் எண்ணப்பட்டு முடிவுகள் அறிவிக்கப்படும்.

## தலைவர் / துணைத்தலைவர் தேர்தல்

நான்காம் நிலையில் தேர்தல் நடைபெறும் 58 கூட்டுறவுச் சங்கங்களின் தலைவர் / துணைத்தலைவரை தேர்ந்தெடுப்பதற்கான தேர்தல் 23.8.2013அன்று காலை 10.00 மணிக்கு நடைபெறும்.

## இடஒதுக்கீடு

ஏற்கெனவே முதல்நிலை, இரண்டாம் நிலை மற்றும் மூன்றாம் நிலைத் தேர்தல்களில் தேர்ந்தெடுக்கப்பட்டது போலவே இந்த நான்காவது நிலைத் தேர்தலிலும் தேர்ந்தெடுக்கப்படும் நிர்வாகக் குழு உறுப்பினர் இடங்களில் 18% ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கும், 30% பெண்களுக்கும் இடஒதுக்கீடு செய்யப்படும். இதர இடங்கள்பொதுப்பிரிவினரிலிருந்து தேர்ந்தெடுக்கப்படும்.

## ஐந்தாவது நிலைத் தேர்தல்

நான்காவது நிலைத் தேர்தல் முடிவடைந்ததும் ஐந்தாவது நிலைத்தேர்தலுக்கான திட்டமும், தேர்தல் அட்டவணையும் வெளியிடப்படும்.

மேற்கண்டவாறு கூட்டுறவுச் சங்கங்களுக்கான மாநிலத் தேர்தல் ஆணையர் திரு.ம.ரா. மோகன், இ.ஆ.ப., (ஓய்வு) தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

ஆணையர்